மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *ஒரே ஒரு செகண்ட்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் சொன்னதை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் கொடுத்ததுபோல, 'உங்களுடைய கடன் இவ்வளவு தொகை தள்ளுபடி செய்யப்பட்டது' என்ற சான்றிதழ் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கவில்லை என்பதைத்தான் நான் சொன்னேனேயொழிய, 10 பேருக்கு நீங்கள் சான்றிதழ் கொடுத்திருப்பீர்கள். ஏதோ பணம் கட்டியதற்கான ரசீதைக் கொடுத்திருப்பீர்கள். ரசீது கொடுப்பது வேறு. (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) முழுமையாக நான் கொண்டு வந்து படிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, அடுத்த கூட்டத்தொடருக்கு நீங்கள் வரும்போது முழுமையாக இதைப் பற்றிய விவரங்களைச் சொல்கிறேன். எங்களை மாதிரி நீங்கள் சான்றிதழ் கொடுக்கவில்லை என்பதை இப்போதும் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இந்த விவரங்களை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். இதற்கு ஏதாவது விளக்கமிருந்தால் அடுத்து வருகிற வாய்ப்பில் நீங்கள் சொல்லலாம்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. முன்பண மானியக் கோரிக்கைகள், 2019-2020, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019-2020 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019-2020 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.